NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 1 August 2019

# வசதி குறைந்த மாணவர்களுக்காக நிபந்தனையற்ற கல்வி உதவி நிதி

வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் கல்வியில் மேம்பட நிபந்தனையற்ற அதாவது எவ்வகையிலும் அவர்களைக் கட்டுப்படுத்தாத கல்வி நிதி உதவித் திட்டத்தை 'எஸ்டி டெலிமீடியா' அறிமுகப்படுத்தியுள்ளது.

எஸ்டி டெலிமீடியாவின் 25 வது ஆண்டு விழாவைத் தொடர்ந்து மூன்று கல்வி நிதி உதவித் திட்டங்களை 'லீ குவான் இயூ ஸ்கூல் ஆப் பப்ளிக் பாலிசி', ஃபிட்ஸ்வில்லியம் காலேஜ், கேம்பிரிட்ஜ் மற்றும் சோமர் வில்லி காலேஜ், ஆக்ஸ்ஃபோர்ட் ஆகிய கல்வி அமைப்புகளுடன் இணைந்து இந்த கல்வி நிதி உதவித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. வசதிக் குறைந்த பின்னணியைக் கொண்ட சிங்கப்பூர் மாணவர்களை இலக்காகக் கொண்டுள்ள இந்த உதவித் திட்டத்திற்காக ஏழு ஆண்டுகளுக்கு வழங்கப்படும் நிதியின் மொத்த மதிப்பு $4 மில்லியனாகும்.

இந்தப் பல்கலைக்கழகக் கல்வி உதவி நிதித் திட்டம் நேற்று முன்தினம் அறிமுகப்படுத்தப்பட்டது. 'எஸ்டி டெலிமீடியா' நிறுவனம் இப்போதுதான் முதன்முதலாக கல்வி உதவி நிதித் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

சிங்கப்பூரின் முதல் பிரதமர் லீ குவான் இயூவின் நினைவாக இந்த கல்வி உதவி நிதித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

தகுதியிருந்தும் வசதிக்குறைவால் கல்வியைத் தொடர முடியாமல் சிரமப்படும் மாணவர்களுக்கு எஸ்டி டெலிமீடியாவின் இந்த கல்வி நிதி உதவித் திட்டம் கைகொடுக்கும்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.